பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 08 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜன்தன் வங்கிக்கணக்குத் திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் பத்தாண்டுகள் நிறைவடைவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி பயனாளிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. மருத்துவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்து தேசிய பணிக்குழு இன்று மாநில தலைமை செயலர்கள் மற்றும் காவல்துறையினருடன் காணொளி வாயிலாக ஆலோசனை நடத்துகிறது.

3. மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் மூன்றாம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

4. ஐ நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவது குறித்த விவாதத்தை ஐ நா பொதுச்சபை அடுத்த கூட்டத்தொடருக்கு ஒத்திவைத்துள்ளது.

5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

ஜன்தன் வங்கிக்கணக்குத்திட்டம் தொடங்கி இன்றுடன் பத்தாண்டுகள் நிறைவடைகிறது.

53 கோடிக்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.

இதனையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துத்தரப்பு மக்களுக்கும் தமது நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் தங்களுக்கான அதிகாரத்தையும், கண்ணியத்தையும் பெறுவதற்கு வங்கிக்கணக்குத் திட்டம் மிகவும் உதவிகரமாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

ஜன்தன் வங்கிக்கணக்குத் திட்டத்தின் பயனாக ஏழை - எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு அரசின் திட்ட உதவிகள் எவ்வித காலதாமதம் இன்றி உடனடியாக சென்றடைகிறது என்று அவர் கூறியுள்ளார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம், சமையல் எரிவாயு மானியம், அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வங்கிக்கணக்குகள் மூலமாகவே செலுத்தப்படுவதால், குறித்த காலத்தில் அதன் பயன்கள் மக்களை சென்றடைவது உறுதியாகியுள்ளது என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், ஜன்தன் வங்கிக்கணக்குத்திட்ட பயனாளிகளுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ஏழை எளிய மக்களை நாட்டின் பொருளாதார நீரோட்டத்திற்கு கொண்டுவர ஜன்தன் வங்கிக்கணக்குத்திட்டம் மாபெரும் பங்காற்றியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்கு இத்திட்டம் உதவியதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசின் நலத்திட்ட உதவிகள் வெளிப்படைத்தன்மையுடன் மக்களை சென்றடைவதற்கு ஜன்தன், ஆதார் மற்றும் செல்போன் செயலி ஆகியவை மிகவும் உதவிகரமாக இருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்னணு பணப்பரிவர்த்தனையின் பயன்கள் மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு குறித்த நேரத்தில் சென்றடைவதற்கு இத்திட்டம் உதவியதாக கூறியுள்ளார்.

கிராமப்புறங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் 67 சதவீத மக்கள் பிரதமரின் வங்கிக்கணக்கை தொடங்கியிருப்பதாகவும் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

புதுதில்லியில் இன்று நடைபெறும் இரண்டாவது இந்தியா – சிலி கூட்டுக்குழு கூட்டத்தில், சிலி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அல்பெர்டோ கிளாவரினும், இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரும் கலந்துகொள்கின்றனர்.

மும்பையில் நடைபெறும் சிலி - இந்தியா வேளாண் வர்த்தக மாநாட்டிலும் திரு அல்பெர்டோ கிளாவரின் கலந்துகொள்கிறார்.

லத்தீன் அமெரிக்க நாடான சிலி, இந்தியாவின் நீண்டகால நட்புறவு நாடாக இருந்து வருகிறது.

திரு கிளாவரின் இந்திய வருகை இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

மருத்துவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான குறுகியகால நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்ய உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட தேசிய பணிக்குழு இன்று மாநில தலைமை செயலர்கள் மற்றும் காவல்துறை தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தவுள்ளது.

மத்திய உள்துறை செயலர் மற்றும் சுகாதாரத்துறை செயலர் தலைமையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற பணிக்குழு கூட்டத்தில் மருத்துவர்களுக்கு சுகாதார பாதுகாப்பு, பணிச்சூழல் மற்றும் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு தொடர்பாக சிபிஐ தாக்கல் செய்த வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் மூன்றாம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தனி நீதிபதி திருமதி காவேரி பவேஜா முன்பு திகார் சிறையில் இருந்து காணொலி வாயிலாக திரு கெஜ்ரிவால் ஆஜர்படுத்தப்பட்டார்.

பின்னர் நீதிபதி அவரது நீதிமன்ற காவலை நீட்டித்து உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் - பங்களாதேஷ் எல்லையை முழுவதுமாக மூடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய – மாநில அரசுகள் எடுத்து வருவதாக அஸ்ஸாம் அரசு கூறியுள்ளது.

அம்மாநில சட்டப்பேரவையில் இதை அறிவித்த வேளாண்துறை அமைச்சர் திரு அதுல் போரா, எல்லைப்பகுதி முழுவதிலும் வேலியால் அடைக்கப்பட்டு, சட்டவிரோதமாக இந்திய எல்லைக்குள் ஊடுருவுவது முற்றிலுமாக தடுக்கப்படும் என்று கூறினார்.

இதற்காக, நான்கு புள்ளி மூன்று ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாம் - பங்களாதேஷ் எல்லையில் வேலி அமைப்பது குறித்து எல்லை பாதுகாப்புப்படையினர் எழுப்பியுள்ள கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஐ நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது குறித்த விவாதத்தை ஐ நா பொதுச்சபை அடுத்த கூட்டத்தொடருக்கு ஒத்திவைத்துள்ளது.

இதற்கான தீர்மானம் ஐ நா பொதுச்சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஐ நா பாதுகாப்பு சபை சீர்திருத்தங்கள் ஒத்திவைக்கப்பட்டதற்கு இந்தியா தனது ஆட்சேபனையை பதிவு செய்துள்ளது.

இந்திய துணை பிரதிநிதி யோஜனா பட்டேல், விவாதத்தை ஒத்திவைக்கும் முடிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்று தெரிவித்தார்.

அரசுகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் சமரச முடிவுகள் ஐ நா-வின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

கடந்த 2009-ஆம் ஆண்டு முதல், ஐ நா பாதுகாப்பு சபை சீர்திருத்தங்கள் தொடர்பாக விவாதம் நடத்துவதற்கு இத்தாலி, பாகிஸ்தான், கனடா ஆகிய நாடுகள் தடையாக இருந்து வருகின்றன.

ஐ நா பாதுகாப்புச்சபை சீர்திருத்தங்களுக்கு தடையாக இருப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது என்று பிரேசிலும் தனது கருத்தை பதிவு செய்துள்ளது.

<<<<<<>>>>>>

செல்போனில் தேவையற்ற குறுஞ்செய்திகள் மற்றும் அழைப்புகள் வருவதை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு அனில் குமார் லஹோட்டி வலியுறுத்தியுள்ளார்.

தொலைபேசி ஒழுங்குமுறை கூட்டுக்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் விவரித்தார்.

தொலைபேசிவழி முறைகேடுகளை தடுக்கும் வகையில், தகவல் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு அனில் குமார் லஹோட்டி வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் ஒன்பது லட்சத்து 35 ஆயிரம் ஆதார் அட்டைகளை மத்திய அரசு விடுவிக்க உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வை சந்தித்து, தாம் இது தொடர்பாக கோரிக்கை விடுத்ததாகவும், அதனை ஏற்று மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இன்னும் ஒருமாதத்திற்குள் இந்த ஆதார் அட்டைகள் மக்களுக்கு கிடைக்கப்பெறும் என்றும் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கூறினார்.

<<<<<<>>>>>>

மேற்கு வங்க மாநிலத்தில் பிஜேபி அழைப்பு விடுத்திருந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் தாக்கம் ஓரளவு காணப்பட்டது.

கொல்கத்தாவில் போக்குவரத்து மிகவும் குறைவாக காணப்பட்டது.

இருப்பினும், கடைகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் செயல்படுகின்றன.

ஹூக்ளியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறியல் செய்ததால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

நந்திகிராம், அலி புர்தர் ஆகிய பகுதிகளில் சாலை மறியல்கள் நடைபெற்றன.

மால்டாவில் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பிஜேபி தொண்டர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

தேசிய பாதுகாப்புப்படையின் தலைமை இயக்குனராக மூத்த ஐ பி எஸ் அதிகாரி திரு **B** சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பீகார் மாநில காவலர் பயிற்சி மையத்தில் இயக்குனராக தற்போது அவர் பணியாற்றி வருகிறார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே ராஜாகுப்பம் அரசு நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிவரும் திரு ஆர். கோபிநாத், தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆண்டுகளாக மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்க தாம் மேற்கொண்ட பணிகளை அங்கீகரிக்கும் வகையில் தமக்கு தேசிய நல்லாசிரியர் விருது கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – ஆர் கோபிநாத் – 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

நாட்டின் மேற்கு, மத்திய மாநிலங்கள் மற்றும் கடலோர பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் இதர பகுதிகளில் ஆங்காங்கே மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் சார்பில் 84 பேர் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இவர்கள் 12 பிரிவுகளில் விளையாட உள்ளனர்.

குறிப்பாக பாரா சைக்கிளிங், பாரா ஜூடோ, பாரா படகுப்போட்டிகளில் முதல் முறையாக இந்திய அணி பங்கேற்கிறது.

**<<<<<<END>>>>>>**